1983 ஜனவரி 29]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) பேரூராட்சிகளின் நிர்வாகப் பொறுப்பைக் கவனிக்க ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு அலுவலர் கோட்ட வளர்ச்சி அலுவலர் நிலையில் நியமிக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு தலைவர் அவர்களே, பேரூராட்சிகளுக்கும் தன்னிறைவுத் திட்டம் நீட்டிக்கப்படுகிற நிலையில் அந்தப் பணிகளைச் செய்யவும் திட்ட மதிப்பீடுகளைத் தயார் செய்யவும் ஒன்றியப் பொறியாளர்களையே நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. அதனால் காலதாமதம் ஏற்படுகிறது. ஆகவே பேரூராட்சிகளுக்கு தனியாக பொறியாளர்களை நியமிக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அது பரிசீலனையில் உள்ளது.

திரு. ஏ. எம். சேதுராமன் : தமிழகத்திலே இதுவரை தனி அதிகாரிகள் எத்தனை பேர்கள் நகராட்சியின் நிர்வாகத்திற்காக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்? அந்த அதிகாரிகளுக்கு வழங்கப் பட்டு இருக்கின்ற அதிகாரங்கள் அவைகளை முன்னேற்றுவதற்கு எவ்வளவு உதவியாக இருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, 15 பேர்கள் நியமிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு உள்ள அதிகார வரம்புகள் 8 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு இருக்கின்றன. அவைகளை யெல்லாம் படித்தால் அதிக நேரமாகிவிடும். ஆகவே தனியாக வந்தால் அவர்களிடம் தெரிவிக்கலாம்.

மாணவர் இல்லங்களிலுள்ள மாணவர்களை மருத்துவ சோதனை செய்யும் திட்டம்.

*வினா எண். 53—திரு. சி. கோபால் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

அரசின் சார்பில் நடத்தப்படும் மாணவர் இல்லங்களில் உள்ள மாணவர்களை மாதத்திற்கு ஒரு முறை சோதனை செய்ய ஆங்காங்கே உள்ள அரசு மருத்துவர்கள் பணிக்கப் படுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஆதி திராவிட நலத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள மாணவர் இல்லங்களிலுள்ள மாணவர்களை அந்தந்த இடங்களில் உள்ள மருத்துவமனை அல்லது ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அதிகாரிகள் மாதம்

ஒரு முறை மாணவர்களை சோதனை செய்து வருகின்றனர். மற்ற மாணவர் இல்லங்களில் உள்ள மாணவர்களை மருத்துவர்களால் சோதனை செய்யும் திட்டம் இத்துறையில் இல்லை.

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகிற போது ஆதி திராவிட நலத்துறையின் சார்பிலே இயங்குகின்ற இல்லங்களுக்கு மட்டும் என்று சொன்னார்கள். கிராமப்புறங்களில் பல இடங்களில் பிற்பட்ட நலத்துறையின் சார்பிலே நடைபெறுகிற இல்லங்களுக்கும் மாதத்திற்கு ஒருமுறை அங்கே இருக்கிற மாணவர்களை பரிசோதிக்க வேண்டுமென்று அரசு உத்தரவிட முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கனவே ஒரு அரசாணை இருக்கிறது. ஜி. ஓ. எண். 1814. அந்த அரசாணையின் படி the Government empowers the Superintendents. Principals and Deans of the Colleges and Hospisals to grant permission t Mecical officers working under h ir control to Supervise — என்று இருக்கிறது. ஆகவே அதை பயன்படுத்திக் கொண்டு இந்த வேலையில் ஈடுபடலாம். அதுமட்டுமல்லாமல் ஸ்பெஷல் ஸ்கூல் இன்ஸ்பெக்ஷன் ஸ்கீம் என்று 153 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கும், 33 முனிசிபாலிட்டீஸ் எல்லைக்குள் 7 லட்சம் மாணவ, மாணவியர்களை பரிசோதனை செய்யக்கூடிய ஒரு திட்டம் இந்த ஆண்டு கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே அந்தத் திட்டத்தின் கீழே எல்லா மாணவர்களும் பயன் அடையக்கூடிய நிலைமை இருப்பதால் மாண்புமிகு உறுப்பினர் சொல்லியிருக்கிற கருத்து தற்போது பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாறு காணாத வகையில் கடந்த ஆண்டு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு ஏறத்தாழ 1,400 மருத்துவர்களை நியமிக்க உத்தரவிட்டிருப்பதாக நாம் அறிகிறோம். அதே வகையில் மேலும் 1,000 மருத்துவர்களுக்கு புதியதாக வேலை வாய்ப்பினை உருவாக்கித் தருகிற திட்டம் பரிசீலனையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த நிலையில் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை கல்லூரி, பள்ளிகளில் படிக்கிற மாணவர்களின் இல்லங்களுக்கு கட்டாயமாக அரசு மருத்துவர்கள் சென்று மாணவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிற நிலைமையினை அறிய அரசு உத்தரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நல்ல யோசனை; பரிசீலிக்கப்படும்.